[1975 நவம்பர் 4

உழவர் பயிற்சி நிலையங்கள்

*** 175 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நவீன விவசாயச் சாகுபடி முறைகளைப் பயிற்றுவிக்கும் உழவர் பயிற்சி நிலையங்கள் நமது மாநிலத்தில் எங்கெங்கு உள்ளன?

(இ) அவற்றில் என்னென்ன போதிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) ஒரு விவர அறிக்கை * பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல் : நவீன சாகுபடியில் புகையான் என்ற பூச்சியின் காரணமாக மிக மோசமான நிலையில் தஞ்சையில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த புகையான் பூச்சியைப் போக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புகையானைப் பற்றித் தனியாக ஸ்டேட்மென்ட் வைக்க இருக்கிறேன். அப்போது விவரம் கொடுக்கப்படும். உழவர்கள் பயிற்சி நிலையங்களில் எல்லாப் புது மருந்துகளைப் பற்றியும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

வேளாண் கருவிகளுக்கான உதிர்பாகங்கள்

*** 176 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத்துறைக்குச் சொந்தமான போரிங்குழாய், புல்டோசர் டிராக்டர் போன்றவைகளின் உபகரணங்கள் விற்பனையாளர்களிடமிருந்து வாங்கும் முறையினை மாற்றித் தயாரிப்பாளர்களிடம் மட்டுமே வாங்கவேண்டும் என அரசு ஆணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரங்களும், அதற்கான காரணங்களும் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

---

*143-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS